Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939,

இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆனி மாதம் 28 உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெங்கை யிணையடி நீழலே

[புத்.-சுரு] யாழ்ப்பாணம்:- கரஷு ஆனிமீ உகூ உ வெள்ளிக்கிழமை (13 ஜூலை 1951) [இல்.-உஅ]

சிவஞானபோதச் சொற்பொழிவு

I

— திரு. V. P. காந்திமதிநாதபிள்ளை —

இவ்வுலகம் உள்ள பொருள்

இவ்வுலகமும் அதன் பல பகுதிகளும் தோற்றம் நிலை ஒடுக்கமாகிய மூன்று தொழில்களையும் பொருந்தி நிற்குமென்று கூறினோம். எனினும் இவ்வுலகிற்குக் கர்த்தா வேண்டுமென்பது பெறப்படுமா? என்ற இவ்வுலகம் இல்பொருளாகில் இல்பொருளுக்குக் கர்த்தா வேண்டுவதின்றாய் முடியும். ஆனால் மேற்கூறிய முத்தொழில்களையுடைய உலகம் இல்பொருளாயிருக்க முடியாது. இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்தும் தோற்றம்முதலியன கிடையா. அது கேவலம் வசனமாத்திரமே. காம் ஆராய்ச்சி செய்யும் இவ்வுலகிற்கோ தோற்றமுதலியன உள என்று முற்பாடத்தில் விளக்கியுள்ளோம். ஆதலால் அது, இல்பொருளாகமாட்டாது; உன்பொருளேயாதல் வேண்டும். எக்காலத்தும் உன்பொருளாதலும் வேண்டும். ஒருகாலத்து உள்ள பொருள் மற்றொருகாலத்து இல்பொருளாவதில்லை. இல்பொருள் உன்பொருளாவதுமில்லை. இதுவே 'சற்காரிய' உண்மை. இவ்வுண்மையை உணர்த்தி வலியுறுத்தவே இச்சூத்திரம் 'அவை.....நிதியே' என்ற இயைபுற ஓதியது. (நிதி = உன்பொருள்.)

இவ்வுலகம் கர்த்தாவை உடையது.

இவ்வுலகம் உன்பொருளென்றோம். அது தோற்றம் நிலை இறுதியாகிய மூன்று தொழில்களையுடையதெனவும் கூறினோம். என்றும் தானே தோன்றித் தானே நின்று ஒடுங்காதா? அதன் தோற்றம் நிலை ஒடுக்கங்களுக்கு ஒரு கர்த்தா ஏன் வேண்டும் என்பதை ஆராய்வாம். உலகம் உள்ளபொருள்; ஒடுங்கியபோதும் உள்ளபொருள் தோன்றியபோதும் உள்ளபொருள்; நிற்கும்போதும் உள்ளபொருள். அதாவது ஓரே உலகம் மூவேறு விதங்களாய் வடிவம் மாறும். ஒடுங்கியபோது காரணவடிவமாயிருக்கும்; தோன்றியபோது காரியவடிவமாய் வரும்; நிற்கும்போது அக்காரியவடிவில் வளரும். இவ்வாறு வடிவம்மாறும் உலகம் சேதனமாகிய சடம். ஆதலால் இதுதானே தன் வடிவத்தை மாற்றிக்கொள்ளமாட்டாது. அதனை அவ்வாறு மாற்றக்குரியவன் ஒருவன் வேண்டும். அவ்வாறே உலகின் காரணவடிவத்தைக் காரிய வடிவமாக மாற்றுதற்கும், அவ்வடிவில் அதனை வளர்ப்பதற்கும், மீள அதனைக் காரண வடிவமாக ஒடுக்குதற்கும், சேதனனாகிய கர்த்தா ஒருவன் வேண்டும். இக்கருத்தினை உணர்த்தவே இச்சூத்திரம் 'அவை.....தோன்றிய' எனனாது 'அவை...தோற்றிய' எனப் பிறவினையில் ஓதியது.

இவ்வுலகம் மாறிமாறி முந்தொழிற்படும்

இவ்வுலகம் தோற்றம் நிலை ஒடுக்கமாகிய மூன்று தொழில்களைப் பொருந்தி நிற்குமென்றோம். இம்மூன்று தொழில்களையும் ஒரேமுறை தான் பொருந்தி நிற்குமா? அன்றி மாறிமாறிப் பொருந்தி நிற்குமா? என்பதை ஆராய்வாம். இவ்வுலகம் என்றும் உள்ள பொருள் என்றோம். இவ்வடிவ மாறுதல் கர்த்தாவாலன்றித் தானே நடைபெறுமேல் அதற்கு யாதும் பயன் வேண்டப்படுவதில்லை. இவ்வடிவ மாறுதல் சேதனனாகிய கர்த்தாவாலேயே உளதாக, அஃது யாதானும் பயன்

தொடர்ச்சி பக்கம்

கரடியுங் கடிதக்காரனும்

பதினைந்து கடிதங்கள் கொண்டுபோய்க் கொடுக்கும் ஒருவனைச் சென்றவாரம் ஒரு பெண்கரடி ஓடிவந்து தாக்கியபோது கரடிகளை கடிதங் கொடுப்பவனுக்குமிடையே சண்டை மூண்டது; ஆனால் கடிதங் கொடுப்பவன் தான் வைத்திருந்த கதியினால் கரடியை வெட்டிக் கொன்று விட்டானாம்; கரடி கடிதங் கொடுப்பவனைத் தாக்கியமைக்குக் காரணம் பின்வருமாறு சொல்லப்பட்டது; இந்தக் கரடியின் ஒரேயொரு குட்டியைக் கடிதங் கொடுப்போன் பிடித்துக்கொண்டு போய் ஸெறைறர் பார்ன்ஸ் கந்தாவத்தைக்குக் கொடுத்துவிட்டானாம்.

தோத்திரம்

ஏகத்திரு வுருவத்தினன் எங்கோன்உமை பங்கன்
பாகத்தமிழ் பகரும்பசு பதிமேவிய கோயில்
பூகக்குலை மேகத்திரள் பொரவிண்டப சுந்தேன்
மாகப்பெரு நதிபோல்வரு மதுரைத்திரு நகரே.

விராட்டுருவத்தையுடையவரும், எங்களெல்லார்க்குந் தலைவரும், மீனாக்ஷியம்மையாரை இடப்பாகத்தில் வைத்தவரும், மூன்று பிரிவாக வுள்ள தமிழைச் சொல்லியவரும், உயிர்கட்குத் தலைவராயுள்ளவருமாகிய சோக்கலிங்கப்பெருமான் எழுந்தருளிய திருக்கோயிலின்கண்ணே (நிற்கின்ற) கமுகுகளின் குலைகள் முகிற்கூட்டங்களைமீது உரோஞ்சுண்ண, அதனாற் பெருகச் சிந்திய செந்தேனானது ஆகாயகங்கை பாய்வது போற் பெருகி (நிலத்தை நோக்கி) வாரம்பெற்ற சிறப்போடு கூடியது மதுராபுரி யெனப்படுங் திருநகர் என்பது பொருள்.

ஏகத்திருவுருவம் - விராட்டுருவம்; பாகத்தமிழ் - இயல்இசை நாடகம் என்னும் முப்பாகங்களைக்கொண்ட தமிழ்மொழி; பகரும் பசுபதி - தகதருளிய பெருமான்; இனி இறையனாரைப் பொருளைப் பாடிய சோமசுந்தரக் கடவுளெனக் கூறலுமாம். பசுபதி - உயிர்கட்குத் தலைவராயுள்ளவர். பூகம் - கமுகு; மாகப்பெருநதி - ஆகாயகங்கை, தேனமேவிருந்து சிந்துதலினால் ஆகாயகங்கையை உவமானமாகச் சொன்னார்; இது மதுரைத் திருப்பதிச் சிறப்புக் கூறியவாறும். (90)

சகோதரிமார் தற்கொலை

"இவ்வுலக வாழ்க்கையை வெறுத்துவிட்டோம்"

நமபலாங்கொடையைச் சேர்ந்த புருமபியென்னுமிடத்தில் வசிக்கும் சைமன் லில்லா என்பவருடைய இரு புதல்வியர்கள் கடலுள் வீழ்ந்து ஒருங்கு தற்கொலை செய்துகொண்டார்கள். 25 வயதுவரைகொண்ட குமாரி டோத்தியென்பவளுடைய பிரேதம் அம்பலாங்கொடைக்கடற்கரைக்கணித்தாகவுள்ள பெலிண்தானத்தின் பிற்புறத்தில் கொண்டு வந்து ஒதுக்கப்பட்டதாம். 23 வயதுப் பிராயமுள்ள குமாரி சுமனு என்பவளின் பிரேதமும் அதே இடத்திற்குச் சமீபமான கடற்கரையிற் பிந்திவந்தடைந்ததாம். பிரேதங்களின் விசாரணைப்போது பின்வரும் விஷயங்கள் வெளிவந்தன:-

இப்பெண்களின் பிதாவாகிய லில்லா விசாரணைப்போது தன் மக்கள் எழுதிவைத்த மூன்று கடிதங்களைக் கொண்டுவந்து விசாரணையதிகாரியிடம் கொடுத்தார்; அவைகளுள் இரண்டு அக்குள்ள பொலிஸ்பரிசோதகருக்கு எழுதப்பட்டவை:- "இந்த உலக வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு ஏற்பட்டமையால் நான் என்னுயிரை மாய்க்க நிச்சயித்துவிட்டேன் — G. W. சுமனு.

தகப்பனுக்கு மாறவள் எழுதிவைத்தகடிதம்:— "நான் தற்கொலைபுரிவதற்கு துணிந்ததமக்குக்காரணம் இவ்வுலக வாழ்க்கையில் எனக்குண்டான பெருவெறுப்பாகும், குறைநினைக்கவேண்டாம். — கன்னிநுவடு.

தகப்பன் சொன்ன சாட்சியம்:—

"தற்கொலை செய்தவர்களிரண்டு பேரும் எனமகளா; மூத்தவள் பிரஜாபதிவித்தியாசாலையில் ஒரு ஆண்டில் உபாத்தியாயனியாவள்; இளையவள் ஆண்டில் ஸ்.ஸ்.ஸி. வகுப்பிற்படித்துவந்தவள்; குறித்தகாலை பகல் 10 மணிவரையில் தமக்கையும் தங்கையும் புறப்பட்டுப்போய் 1 மணிவரையிற்றான் மீண்டுவிட்டிற்குவந்தார்கள்; எங்கே போயிருந்தீர்கள் என்று நான் கேட்டபோது பலப்பிட்டி வைத்தியசாலையிற் சுகவீனமாகக்கிடக்கும் சகோதரியென்னும் சோயாளியைப் பார்க்கும்படி போனோம் என்றுமறுமொழி சொன்னார்கள்; எனக்குச்சொல்லாமற்போனதற்காக நான் அவர்களைக் கடிந்து பேசினேன்; அதன்பிறகு இரண்டு பேரும் தாயான தங்கள் மாமியார் வீட்டிற்குப் போவதாக எனக்குச் சொல்லிவிட்டுப்போனார்கள்; மீண்டு வரவில்லை"

மந்திரி சபையில் இஸ்லாமியர் இல்லை

யாழ்ப்பாணத்திலே திரு. G. G. பொன்னம்பலம் தொகையிற் குறைந்த சாதியினரை ஐம்பதிற்கைப்பதாக மதித்து அவர்கட்குச் சுயராச்சிய உரிமைகள் வழங்கப்படல்வேண்டுமெனக் கேட்டபோது, இஸ்லாமியராகிய ராக்கள் அவருடன் ஒத்துழைத்த லிஸறிச் சிங்களருடனேயே ஒத்துழைத்தோம்; மந்திரியாகவிருந்த மிஸ்டர் ஜயா பாக்ஸ்தானத்திற்குயர்தர இலங்கைப் பிரதிநிதியாகப் போனபின்பு எங்ஸ் சாதியார் சமயதாருள் ஒருவரேனும் மந்திரி சபையில் இப்போதில்லை; ஆனால் திரு. பொன்னம்பலத்திற்கு மந்திரிபதவி கொடுக்கப்பட்டிருக்கிறது; எங்களுளொருவர் மந்திரியாக வில்லாமையினால் இஸ்லாமிய மக்களுக்குரிய பல கன்மைகளைப் பெற முடியாமலிருக்கிறது; இதனையிட்டுச் சிங்கள அரசினர் கவனஞ் செலுத்தக்வேண்டும்" என்று வெருவலைப் பட்டினசங்கத் தலைவராகிய பிறக்ஸ் பக்கிர் மரக்காயர் ஒரு கட்டத்திற் பேசினாராம்.

'சண்டியனைக் கொன்றவற்கு அபராதம்

அல்பபெனிஸ் அப்புஹாமிஎன்பவனை ஜெமா என்னுமொருவன் கொகருவன்ற வழக்கு சென்றவாரம் கண்டி உயர்தர நீதிமன்ற விசாரணைப் போது விளக்கப்பட்டது. எதிரி, கொல்லப்பட்டவன் ஒரு பெரிய சண்டியனென்றும் அவன் காரணமில்லாமல் தன்னைத் தாக்கியபோது, தற்பாதுகாப்பின் பொருட்டுத் தான் அவனைக் கொன்றுவிட்டதாகவும ஒப்புக்கொண்டான் விசாரணைமுடிந்தபின்யூரிமார் அப்புஹாமி ஒரு பெரிய துட்டனெனவும் அவனைக் கொன்றமையினால் அவ்வூரி லுள்ளவர்களுக்குப் பெரும் ஆறுதலாகுமென்றும அந்த எதிரி வாரவர்களுக்குப் பெரும் நன்மை செய்தவனாகின்றானெனவும் சொல்லினர். அதனால் நீதியாசர் குற்றத்தை எதிரிக்கு அனாதி விளக்கமுடியும் வரைக்கும் மறியலும 250 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

சிங்கள மொழியில் விசாரணை

கொழும்பிலுள்ள பெரிய நீதிஸ் தலத்தில் முதன்முதல் முழுவதும சிங்கள மொழியிலேயே ஒரு வழக்கு விசாரணை செய்யப்பட்டது. நீதிவானும் எதிரி வழக்காளிகள் பக்கலில் நியாயவாதிகளும் சிங்களர்களாக இருந்தமையினால் இவ்விசாரணை அநுகூலமான முறையில் நிறைவேறியதாம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்துசாதனம்

யாழ், கரஹு ஆனிமீ உ௯௨ வெள்ளிக்கிழமை

காட்டுங் காரணம் போலியானது

கொழும்பிலுள்ள சாராயத் தவறணைகள் கள்ளுக் கடைகளென்று மிவற்றை அறவே யொழித்துவிடும் நோக்கமாக அங்கு வசிக்கும் அபிமானிகள் பலரும், மதுபான நீக்கப் பகுதியாரும் பெருமுயற்சி செய்தமையினால் நகரிலுள்ள பல தவறணைகளுங் கள்ளுக் கடைகளும் மூடப்படலாயின; ஆனால் இந்த நல்ல முயற்சி, மதுபானப் பகுதிக் "கமிஷன"ராகிய மஸ்ரர். G. L. D. டேவிற்ஸன் என்பவருக்குப் பிடிக்கவில்லை யென்பது அவர் வெளியிட்ட அறிக்கையைக்கொண்டு அறியக்கிடக்கிறது; தமது அறிக்கையில் அவர் என்ன சொல்லுகிறார்!

"புறக்கோட்டையி லுள்ள கள்ளுக்கடைகள் சாராயத் தவறணைகளை யொழித்துவிடுதற்குச் சளச்சம்மதம் பெற்றுவருகிறார்கள்; இவைகள் வேணுமென்று சொல்வோர் தொகையைக் காட்டினால் வேண்டா மென்று சொல்வோர் தொகை மூன்று நான்குதான் அதிகம்; இதனாற் கள்ளுக்கடை சாராயத் தவறணைகள் இருக்கவேண்டுமென்ற எண்ணங் கொண்டவர்கள் பலரென்பது புலப்படக் கிடக்கின்றது; இப்படியான தவறணைகள் தவிர்க்கப்படுமிடங்களிலே மதுபான வியாபாரம் சோரமாகப் பெரிதும் நடப்பதாக நான் அனுபவத்தில் அறிவேன்; சென்ற ஆண்டு அக்டோபர் மாசத்திற் குருந்தகலுள்ள கள் சாராயத் தவறணைகள் வாக்குப் பெறாது தவிர்க்கப்பட்டமையினால் மதுபானச் சோரவியாபாரம் பெரிதுந் தலைக் கொண்டுகிட்டது; தவறணை மூடப்பட்டிருக்கும் ஏனைய இடங்களிலும் இப்படியே நடக்கின்றது; தவறணைகளுள்ள வேற்றூர்களிலிருந்து கள் சாராயமென்னுமிவைகள், இப்படியான தவறணைகள் தவிர்க்கப்பட்ட ஊர்களுக்கு "லொறி" வண்டி முதலியன மூலமாக மறைவிற் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுகின்றன"

எனவே மதுபானத் தவறணைகள் தவிர்க்கப்படாத ஸ்தானங்களைக் காட்டிலும் தவிர்க்கப்பட்ட தானங்களிலே, அதிகமாகச் செலவாகின்றதென்பதும், மதுக்கடைகளைத் தவிர்ப்பதற்கு இரண்டு மூன்றுபேர் மேலதிகமாக வாக்குக்கொடுக்க வொண்ணாது பலர் கொடுக்கவேண்டுமென்பதும் இந்தக் கமிஷனருடையகொள்கைஎன்பதுவெளிப்படை. உள்ளசாராயத்தவறணைகள்ளுக் கடைகளைத் தவிர்ப்பதனால், இப்பொருள்களின் சோரவியாபாரம்அதிகப்படுமெனமிஸ்ரர் டேவிற்சன் சொல்வது ஒருபோதும் பொருந்தாது; இவருடைய நியாயம் பொருந்துமானாற் சனச்சம்மதம் பெற்றுச் சாராயத் தவறணைகளையுங் கள்ளுக் கடைகளையும் தவிர்க்க வேண்டுமென்ற சந்தர்ப்பமே ஏற்படமாட்டாதே! ஏன்? அப்படித் தவிர்ப்பதனாற்றான் மதுபானஞ்செய்தல் அதிகப்படுமெனக் கூறுவதனாற்றான்; விஷயம் அப்படியல்ல; எந்தப்பொருளையும் கட்டுப்பாடின்றி இலகுவாகப் பெறுதல் இயலுமானால், அந்தப்பொருள்களை மக்களாயுள்ளார் அதிகமாக வாங்கி உபயோகித்தல் சகசமாகும்; குறித்த பொருள் கட்டுப்பாட்டோடுகூடியதாயிருந்தால், தாம் வசிக்குமிடத்திற் கிடையாததாயிருந்தால், எல்லா மக்களுஞ் சிரமப்பட்டு அப்பொருளைவாங்கி உபயோகிப்பரென நாம் காத்திருக்கவொண்ணாது.

கட் சாராயத் தவறணைகளை யொழித்தலினாலே, அவற்றை வாங்கிப் பருகுவோர் தொகை அதிகப்படுமானதால் அவற்றை தவிர்க்காதொழிதல் புத்தியாகுமென்பது மிஸ்ரர் டேவிற்சன் கொண்ட உபாயமென்றால், இந்த உபாயம் இப்பொழுது இலங்கை முழுவதிலுந் தடுக்கப் பெற்றுள்ள அபின் கஞ்சா என்னும் அறிவை மயக்கும் பொருள்களிலும் ஒத்ததாயல்லவா இருக்கவேண்டும்? கொலைகளவு சூது முதலாகச் சொல்லப்பட்ட தீமைகளையெல்லாம் அரசினர் பிரமாணம் பிறப்பித்துத் தடுத்திருக்கின்றார்கள். ஆனால் இவைகள் ஊரிலே இடைவிடையே நேராமற் போவனவல்ல; இப்படித்தான் மதுபானத்தையும்; அரசினர் தம்மெண்ணமாகவேனும், ஊரார் சம்மதம் பெற்றேனும் நாட்டி லிருந்து தவிர்த்து விடுதல் முறையாகும்; அதன்பின் யாருஞ் சோரமாக இத்தீமையைச் செய்யத் தலைப்பட்டால், அச் சோரரைப் பிடித்து விசாரணை செய்து தண்டனைக்குள்ளாக்குதலும் அரசினர் கடமையாகும்.

மேலும், மதுபானத்தினால் நேருந்தீமையை நாட்டு மக்கள் நன்குணர்ந்து மிக்கசிரமப்பட்டுப் பொருள்செலவிட்டுச் சம்மதம் பெற்று நீக்கும்போது, மிஸ்ரர் டேவிற்ஸன் போன்ற உத்தியோகஅடிமை மனப்பான்மைபூண்டவர்கள் அபிப்பிராயஞ் சொல்லத் தலைப்படவேண்டியதில்லையே! சொல்லத்தலைப்பட்டாலும் அப்படிப்பட்டார் கூற்றினைப் பொதுமக்கள் அபிமானிகள் பொருட்படுத்தவேண்டியதில்லையாம்.

நாவலருக்குத் தக்கினை

தென்னிந்திய திருநெல்வேலி "இட்டமொழி" பஞ்சாங்க கணிதராகிய திரு. சிவகுரியசாராயணபிள்ளை கல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரிடத்து அதிக அபிமானம் பூண்டவர்; அடுத்த நந்தனவருடப் பஞ்சாங்கத்தை ஆரம்பிக்கத் தொடங்கும்போது நமது கணிதர் நாவலரவர்கள் படத்தை விசேஷமாகப் பூசித்து அப்பெரியாருக்குப் பரதகாணிக்கையாக 5 ரூபாவைச் சமர்ப்பித்து, அக் காணிக்கையை நாவலரவர்கள் ஞாபகார்த்தமாக நடைபெற்றவரும் இந்துசாதனப்பத்திரிகைக்கு ஷேமநிதியாக அனுப்பியுள்ளார், நாவலர்மேல் இக்கணிதர் கொண்ட அபிமானம் பாராட்டற்பாலது.

மந்திரிப் பதவியை விடுத்தார்

சுகாதாரப்பகுதி மந்திரியாகிய திரு. S. W. R. D. பண்டாரநாயக தமது மந்திரிப் பதவியிலிருந்து விலகிவிட்டாரென இப்பொழுது அறியலானோம்.

செவ்வாய்ப் பிரசங்கம்

நிகழும் ஆனிமீ உ௯௨ (6-7-51) வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் காரைநகர், கருங்காலி சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் தொண்டர் ஆ. வே. அருளம்பலம் "ஆலய வழிபாடு" என்னும் விஷயத்தைப் பிடிகையாகக் கொண்டு சிறந்த பிரசங்ஞ்செய்தனர். பிரசாரகர் ஆலய வழிபாடு மலபந்தத்தை நீக்கி இறைவனின் திருவருளைப் பெறுதற்கு முக்கிய சாதனமாகும் என்றுகூறி, சைவ வித்தியாசாலைகளில் சமயக்கல்வி கற்பிப்பது இப்போது குறைந்துவருவதாகவும், சமயக் கல்வியை விருத்தியாக்குவதற்குச் சைவ ஆசிரியர்களை பண்டைக்காலம்போலத் தொண்டாற்றி வரவேண்டுமென்றும் தமது பிரசங்கத்தில் கேட்டுக்கொண்டனர்.

—கடித.

கோப்பாய் கிராமச்சங்க தலைவர் தெரிவு

சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மேற்படி கிராமச்சங்கத் தலைவர் தெரிவில் போட்டியிட்ட திரு. N. அருளம்பலத்துக்கு 7 சம்மதச் சீட்டுக்களும், திரு. S. செல்வராசாவுக்கு 3 சம்மதச் சீட்டுக்களும் கிடைத்தன. ஆகவே திரு. அருளம்பலமே தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். - கடித

நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (15-7-51—21-7-51)

மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இவ்வாரத்தின் முதலிரு நாட்களில் எக் கருமத்தையும் தொடங்கிக்கொள்ளலாமெண்ணாது; சுகவீனம், மனச்சஞ்சலம், அந்தரங்க சத்துருக்களாற் கெடுதி முதலியன நேரக்கூடும், ஆனால் எஞ்சிய நாட்கள் பண வருவாய்க்குரியன.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசிரிடம் 1, 2-ம் பாதம்

இக்கிழமையின் முதலிரு நாட்களிற் புதிய கருமங்களைத் தொடங்கலாம்; திங்கட்கிழமை இரவு தொடக்கம் புதன்கிழமை முடிய அவதானமாக நடந்துகொள்க; எஞ்சிய நாட்கள் நன்மைக்காகியன.

மிதுனராசி மிருகசிரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

செவ்வாய்க்கிழமையின்பின் தேக நிலை திருப்தி நிடமுண்டு; பண லாபமுமுண்டு; வியாழன் வெள்ளிக்கிழமைகளிற் சாவதானமாக நடந்துகொள்க.

கடகராசி புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

செவ்வாய்க்கிழமை தொடக்கம் தேக சுகத்தைப் பேணிக்கொள்க; மனக்கிலேசம், ஆறுதலின்மை என்னுமிவை நேரக்கூடும்; எவரோடும் தர்க்கம்செய்யவேண்டாம்.

சிங்கராசி மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

பிறர் கருமங்களிலே தலையிட வேண்டாம்; தலையிட்டால் மன ஆறுதலில்லையாம்; தேகசுகத்தைப் பேணிக்கொள்க; கண்களில் ரோகம் நேரக்கூடும்; கிழமை முடிவிற் பணவரவுண்டு.

கன்னிராசி உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

பிதிர் வழியால் சில விபரீத விளக்கம் நேருமே ஒழிய, இது நன்மைக்காகியகாலம்; புது முயற்சியால் பலனடையலாம்; கிழமை முடிவிற் சந்தோசமுண்டு.

துலாம் சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

பார்க்கும் கருமங்களை இவ்வாரத்தில் அவதானமாகப் பார்க்க வேண்டும்; பண வருவாயும் அற்பமாகவண்டு; கருமங்கள் செய்வதற்கு ஆண்கள் பெண்களையும், பெண்கள் ஆண்களையும் அதிகம் நம்பியிருக்கவொண்ணாது.

விருச்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

இந்தக்கிழமை வீண் பழி கேட்க வேண்டி நேரும்; கிழமையின் பிற்பகுதியில் சத்துரு ஜயமுண்டாம்; கிழமை முடிவில் கொண்டாட்டமும் அதனாற் பணச் செலவுமுண்டு.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

இவ்வாரத்திற் பண நஷ்டம் நேரக்கூடும்; திங்கட்கிழமை தொடக்கம் தேக சுகத்தை அதிகம் பேணுக; உத்தியோகஸ்தாதத்திற் சங்கடமுண்டாம்.

மகராசி உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

குடும்ப சங்கடங்களுண்டு; புதிய பகைவர்களும் தோன்றுவர்; எதற்கும் எழுத்துமூலம் பொறுப்புக் கொடுக்க வேண்டாம்.

கும்பராசி அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2 ம் 3-ம் பாதம்

கிடந்தகாலம் சித்தியாகாதிருந்த கருமம் இவ்வாரத்திற் சித்தியெய்தும்; பண விஷயமாக விருத்தியுண்டு; சத்துருக்களாலுமு புகழுமுண்டு.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

செய்யும் கருமத்தில் விருத்தியுண்டு; பொருள் வரவுமுண்டு; ஆனால் தேகசுகத்தை அவதானமாகப் பேணுக.

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

குருநாகலில்

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை (8-7-51) ஞாயிற்றுக்கிழமை சபை மண்டபத்தில் திரு. க. சதாசிவம்பிள்ளையின் தலைமையில் இரவு 7 மணியளவில் தேவார பாராயணத்துடன் தொடங்கியது. அத்தருணம் திரு. க. சரவணமுத்து, திரு. க. பொன்னுத்துரை ஆகியோரால் மணிவாசகர் சரிதையும் அவரைப் பற்றிய குறிப்புரைகளும் பல எடுத்துக்காட்டுகளுடன் கழகிய முறையில் பேசப்பட்டது. அதன்பின் திருமதி. மீனாட்சிஅம்மையார் பக்திப் பாடல்கள் பாடினார். தலைமைப் பேருரையின் பின் திரு. சம்பந்தர் அவர்களால் யாவர்க்கும் நன்றி கூறப்பட்டது. தேவாரமோதிப் பிரசாதம் வழங்கப்பெற்றுக் கூட்டம் 9-30 மணியளவில் நிறைவெய்தியது.

— கடித

●

காரைநகரில்

மேற்படி பெருமான் குருபூசைத் திருநாளை முன்னிட்டு இந்த மூலாய் மாதம் 3-ந் தேதி தொடக்கம் 8-ந் தேதி வரையும் காரைநகர்ச் சிவன் கோயில் மணிவாசகர் மடலயத்தில், திரு. எஸ். கோவிந்தசாமியால் திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்பட்டுக் குருபூசையும் சிறப்பாக நடைபெற்று அன்பர்களுக்குப் பிரசாதமும் அளிக்கப் பட்டது. அன்றுபகல் 11 மணியளவில் சிவன் கோயிலில் மணிவாசகப் பெருமானுக்கு உருத்திர அபிடேகமும் நடைபெற்றன. - கடித

●

மாவத்தகமவில்

மாவத்தகமச் சைவ மகாசபையில், மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை, சென்ற ஞாயிற்றுக் கிழமை; தலைவர் திரு. மு. சபாபதிப்பிள்ளை தலைமையில் மொறக்தோட்டக் கண்டக்கர், திரு. ச. சோமகந்தரத்தின உபயமாகச் சிறப்பாய் நடைபெற்றது. சைவ பிமானிகள் அனேகர் சமுகமளித்தனர். விசேடபூசை முடிந்ததும் குருநாகல் சைவமகாசபைக் காரியதரிசி திரு. சே. க. சண்முகம்பிள்ளை மாணிக்கவாசகசுவாமிகளின் திவ்விய சரிதையை உருக்கமாக விளக்கி, ஓர் அரிய பிரசங்கஞ் செய்தார். சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய, திருவாசகங்களை ஓதி, கண்மையடையுமாறு யாவரையும் வேண்டினார். பின்னர், கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றதாய்; ஷை சபைக் காரியதரிசி உபயகாரருக்கும், சபையோருக்கும், பிரசங்கியாருக்கும் நன்றி கூறினார். ஈற்றில், திருமறை ஓதப்பட்டது.

— கடித

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதர்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

மறவன்புலோவில்

மறவன்புலோ சி. மு. சங்கமும் சு. சேவாசங்கமும் பொருர் ஆசிரியசங்கமும் சேர்ந்து மேற்படியூர் சுகல கலாவல்லி வித்தியாசாலையில் 8-7-51 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் ஷை குருபூசையை மிகவுஞ் சிறப்பாக நடாத்தின. பூசையின் பின்னர் ஆநடப்பாக்கள் ஓதப்பட்டன. பின்பு தலைவர் திரு. மு. கனகரத்ப்பிள்ளை தலைமையிற் கூட்டம் ஆரம்பமாயிறது. தலைவர் தமது முன்னுரையில் சங்க வளர்ச்சி குருபூசை என்பவை சமபந்தமாக விளக்கிக் காட்டினார். பின்னர் ஆசிரியர் திரு. வே. நீரத்தினம், ஆசிரியர் திரு. க. முத்துக்குமாரு, திரு. க. வேலுப்பிள்ளை என்பவர்களால் முறையே உனக்கு வேண்டுவது என்ன, திருவாசகம், மாணிக்கவாசக சுவாமிகள் என்ற விஷயங்கள் விளக்கிப் பேசப்பட்டன. பின்னர் காரியதரிசி திரு. நா. பொன்னம்பலம் குறிப்புரையும் நன்றியுரையும் கூறத் தலைவரின் நிறைவுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியதும் யாவர்க்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

— கடித

●

சுழிபுரத்தில்

ஷை குருபூசை விக்ரோறியாக் கல்லூரியில், அக்கல்லூரிச் சைவ மாணவ சேவாசங்கத்தாரால் (8-7-51) பிற்பகல் 4 மணியளவில் நடத்தப்பட்டது. நாலவர் உருவப் படப்பூசை, தேவார திருவாசகம் செல்வன் செல்வச்சிவபாதசுந்தரனாற் பாடப்பட்டன. மாணிக்கவாசகர் சரித்திரம் திரு. க. கார்த்திகேசு வாற் பிரசங்கம் செய்யப்பட்டது. ஈற்றில் தேவார பாராயணத்துடன் பிரசாதவழங்கலுடனும் பூசை நிறைவெய்தியது.

கடித

●

மாவிட்டி நேற்று பாலர் ஞானோதய சங்கம்

இச்சங்கத்தார்மூலம் நடைபெற்ற மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை வரலாறு, ஒன்றேடொன்று முரண்பட இரு பகுதியாரால் இப்பத்திரிகைக்கு எழுதியனுப்பப்பட்டமையின இடமபெறவில்லை.

சிவஞானபோதச் சொற்பொழிவு

1-ம் பக்கத் தொடர்ச்சி

கருதியே அக்கர்த்தாவால் செய்யப்படல்வேண்டும். இவ் வுலகினைத் தோற்றுவிக்குமுன்னர் அது ஒடுங்கியன்றோ கிடந்தது. ஊழ்பயன் கருதியன்றோ அவ்வாறு ஒடுங்கிக் கிடந்த உலகம் தோற்றப்படுவதாயிற்று. அதுபோல் இனி ஒடுக்கப்படும் இவ்வுலகமும் மீளவும் அப்பயன் வேண்டப்படும்வரை தோற்றப்படவேண்டுமன்றோ?

எனவே, இம் முத்தொழிலாற் கருதப்படும் பயன் வேண்டப்படும்வரை ஒடுங்கின உலகம் ஒடுங்கியவாறே நில்லாது மீளவும் மாறி மாறித் தோன்றி நின்றொடுங்கிக் கொண்டு நிற்குமெனமுடியும். இக் கருத்தினை உணர்த்தவே இச் சூத்திரம் உலகினை உளதாய் ஒடுங்கும் எனமுறாது, ஒடுக்கத்தின் பின்னரும் ஒடுங்கிய அழிதற்ற உடவுளினின்றும் உளதாம் என்னும் பொருளையும் அடக்கி 'ஒடுங்கி...உளதாம்' என்றோதியது.

ரேடியோ

* இசைத்தட்டு

திருச்சி சனி ஜூலை 14

காலை 7 10 நிகாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கும்பகோணம் ஞானசேகரமணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ராகானம்* 8 30 முடிவு.

1 நீலகன்கேட்டவை* 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 சர்வலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்தி 2 10 சர்வலாசாலைகளுக்கு 2 25 சித்ராகானம்* 2 45 முடிவு.

5 30 கே பி தேவராஜ—சாக்ஸபோன் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோவாத்யகோஷ்டி 6 30 சிராமகிழச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ராகானம்* 7 45 பாலக்காடு ராம பாகவதர் பாட்டு டி பாலகப்பராயலு லயலின் மதராஸ் வ கண்ணன் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 சுவிச்சொரூபேரீர் 9 30 உண்காத் ஏஷ்டக் ஹாலேக்கான் ஒலிப்பதிவு 10 முடிவு.

திருச்சி ஞாயிறு ஜூலை 15

காலை 7 10 நிதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைக்கவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ராகானம்* 8 30 முடிவு.

12 சித்ராகானம்* 12 30 சூர்யகாந்தி நதம்ப நிழ்ச்சி 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 குன்னக்குடி வைத்யநாதய்யர்* 2 தமிழில் செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 சென்னை இசைநிழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 கடத்தூர் வெங்கடேசய்யர் வீணை 5 45 பேடிநாயகனூர் டி பி ராமச்சந்திரன் பாட்டு 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீலகன் கேட்டவை* 6 30 சிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ராகானம்* 7 45 சமகாருதம் கூறவது 8 ராமாமான் சிவகுருநாதன் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 கடத்தூர் வெங்கடேசய்யர் வீணை 10 முடிவு.

திருச்சி திங்கள் ஜூலை 16

காலை 7 10 நிதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 பட்டுக்கோட்டை ஏ பாலசுப்ரமண்யம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ராகானம்* 8 30 முடிவு.

12 30 நடுநாதரப் பள்ளிகளுக்கு 1 நீலகன் கேட்டவை* 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 பன்னுலால் சோஷ் புல்லாங்குழல்* 2 தமிழில் செய்தி 2 10 நிசைவாசிய நூசை* 2 15 தமிழில் பேச்சு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு

5 30 நில்ருபா ஆ நிரே லித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருச்சி வாத்யகோஷ்டி 6 30 சிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ராகானம்* 7 45 நாட்டுப்பாடலில் பருவம் கே கே நாராயிம்ஹன் —பேசுக 8 தான வாத்ய கச்சேரி 8 30 எம் எல் வசந்தகுமாரி* 8 45 ஆங்கிலப் பேச்சு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 பட்டுக்கோட்டை ஏ பாலசுப்ரமண்யம் பாட்டு 10 முடிவு.

திருச்சி செவ்வாய் ஜூலை 17

காலை 7 10 நிதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 டி அமிர்தம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ராகானம்* 8 30 முடிவு.

12 30 நடுநாதரப் பள்ளிகளுக்கு 1 இசைவினை* 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 இரு குரலிசை* 2 தமிழில் செய்தி 2 10 எம் மதுரை எஸ்ராஜ்* 2 15 உயர்நாதரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 எம் சென்னதம்பி பிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 டி அமிர்தம் பாட்டு 6 30 சிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 நிராமெட்டுகள்* 7 45 மன்னார்குடி சேஷாவிந்ரி அம்மாள் சோட்டுவாத்யம் 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 எஸ் நின்னதம்பி பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

ஆபத்தின்மேல் ஆபத்து

இரத்தால் வீங்கண்டு
கிணற்றுள் வீழ்ந்தார்

பம்முனுவா என்னுமிடத்தில் வசிக்கும் சோமசேனு என்பவர் ஒரு செவ்வாய்க்கிழமை சொர்க்கங்காண்; தன் ரதங்களினொன்றின் வறிக்கொண்டு கண்டிக்குரு மார்க்கத்தில், இலங்கைத்திலகவிக்காரைக் கணிதாக ஒரு லவிற் போகும்போது இரதம் தெருவைவிட்டு விலகியமையினால் அதிலிருந்த முதலாளி விசப்பட்டு அயலிலுள்ள கிணற்றுள் வீழ்ந்தார்; முதலாளி கிணறில் எறியப்பட, இரதம் கிணற்றின்மேற் போய்க் கிடந்ததாம். அந்தநேரத்தில் அங்கே வந்த கண்டிப் பொலிசைச் சேர்ந்த உப பரிசோதகரொருவரும் வேறு சிலருஞ் சேர்ந்து இரதத்தைக் கஷ்டப்பட்டுக் கிணற்றின்மேலிருந்தும் அகற்றி, அதன்பின் கிணற்றுள் வீழ்ந்து கிடக்கும் சோமசேனுவையும் வெளியே யெடுத்துக் கண்டிவைத்தியசாலைக்குக் கொண்டோடினர்; ஆனாற் சோமசேனு ஒரு மணி நேரத்தில் இறந்தாராம்.

நாவற்குழிச்சங்கம் (1922)

29 வது வருடபொதுக்கூட்டவரலாறு

மேற்படிசங்க 29 வது வருடாந்தப்பொதுக்கூட்டம் இந்த ஆனிமீ 2 ம் திகதி (16-6-51) சனி வாரம் இரவு 8 மணியளவில், சங்க காரியாலயம், கைதடி, "சிவவாச"வில் அக்கிராசனர் தலைமையிற்கூடியது. சபையோரின் குறிப்புரைக்குப்பின் அக்கிராசனரினது குறப்புரையுடன் முகறப்படி அலுவலாயபெற்றதுமன்றமல், பிரதானவிஷயங்களபற்றிய பிரேரணைகள் முறையே ஏற்றுக் கொள்ளப்பட்டன:-

1. ஆங்கில உயர்தர (S. S. C.) கல்வி, 2. வளந்தோர் கல்வி, 3. அலாரி ஆடு மாடு, 4. பரிசுக்கவேலைப்பகுதி, 5. சீர்ப்பரசனப்பகுதி 6. வையித்தியசுகாதாரப்பகுதி 7 தலைவச் சோடா 8. புகையிரதப் பாதைப்பகுதி 9 அக்கிராம 10. கிராமப்பொதுநலம்.

திரு. சே. அருணம்பலம் சமயோசித அக்கிராசனராகத்தெரிவுபெற்று மறுபடியும் பிரமஸ்ரீ கு. கு. யோகானந்த ஈஸ்வரக்குருக்களே புதுவருட அக்கிராசனராகத் தெரிவுசெய்யப்பட்டார். புதுவருடத்திற்காகிய வேலை உத்தியோகத்தரும் அங்கத்தவர்களுந் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஈற்றில், திரு. ஜே. ஜீ. சுமையா "புதிய கல்கித்திட்டம்" எனும் விஷயம்பற்றிப் பேசினர்.

இன்றியும், மேற்படி கடவடிக்கைகளுக்கிடையே, கைதடி ஆங்கில பாடசாலை மாணவரால் உலகியல அறிவுபற்றி ஓர்வின நடிப்பும் நடைபெற்றது. -கடித.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைந்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

மகளிர் மன்றம்

இலங்கையிற் பெண்கள்

ஒரு நாடு நலம்பெறுதற்கு நங்கையரே காரணர் என்று கூறின் அஃது மிகையாகாது. ஆம்! எந்த நாட்டிற் பெண்கள் முன்னேற்றமாகவிளங்குகின்றார்களோ அந்த நாடே சீர் பெற்ற நாடாகும். எம் அயல் நாட்டைப் பாருங்கள்! எவ்வளவு முன்னேற்றம்! காரணம் பெண்களின் முன்னேற்றமே. ஆனால் எம் இலங்காதீபம் இன்னுந்தான் சரியான முன்னேற்றம் அடைந்தபாடில்லையே. இதற்குப் பெண்களின் பிற்போக்கே காரணம். பெண் என்பவள் சக்தியின் அம்சம். தியாகத்தின் சின்னம். அன்பின் அவதாரம். இன்பத்தின் இருப்பிடம். நாட்டின் நற்தாயினக்கு தேசத்தின் செல்வப் பெருக்கு.

இந்தகைய பெண்கட்குக் கல்வி வேண்டியதில்லை. சமஉரிமை அளிப்பது சரியில்லை. அரசாங்கத்தில் அவர்கட்கு ஏதாவதொரு இடங் கொடுக்கலாகாது என்று கொள்கை அளிப்பதெல்லாம் கொடுங் கூரோகமாகும். பெண்களின் உரிமைகளை மறத்தல் சமுதாய முன்னேற்றம் தடைப்படும். தமிழகத்தில் பெண்கள் உரிமையிழந்து தமியல் நலவளர்ச்சி குன்றுவரேல், தமிழ்ச் சமுதாய வளமும், நலமுங் குன்றுதல் ஒருதலை. மகளிர் வளமடைச் சமுதாய வாழ்க்கை வளர்வதில்லை.

பெண்கட்கு ஆண்களோடு சம உரிமையுண்டு. இதனை எல்லா நாட்டுப் பெண்டிரும் எடுத்துக் காட்டிப் பலனுமடைந்து விட்டனர். ஆனால் எம் நாட்டிற்குன் இன்னமும் இஃது தெளிவுறவில்லை. பாரத நாட்டில் எத்தனை பெண்கள் அன்றும் இன்றும் அருந்தொண்டாற்றி அரும் புகழ் பெற்றனர். பெறுகின்றனர். அங்கனே கன்னாரியாய், சரோஜினி நாயுடு, விஜயலட்சுமி பண்டிதை முதலிய பெண்களின் புகழ் எங்கெல்லாம் பரவியிட்டன. ஏன்? நாங்களுந் தாம் அவர்களைப்பற்றிக் கேளாவியுற்றிருக்கின்றோமே! அவர்களும் பெண்கள் - நாங்களும் பெண்களா?

ஆம்! அவர்களைப்போன்ற பெண்கள் தாம் நாங்களும். அவர்களை தேகத்தில் ஓடும் இரத்தம்தான் எங்கள் தேகத்திலும் ஓடுகின்றது; எனின் அவர்களின் உணர்ச்சியில் அணுவளவேனும் எங்கட்கு இருக்க வேண்டாமா? அவர்களது தாய் நாட்டுப்பற்று - தன்னலமறப்பு - பொதுநலநோக்கு - தேசத்தொண்டு - அதில் ஏனளத்தேனும் எம் மிலங்கைப் பெண்மணிகட்கு இருக்க வேண்டாமா? அத்தகைய பெண்களைப்போன்ற ஒரு பெண்ணாயினும் விரல்மடக்கி எண்ண இவ்வீழநாட்டில் இல்லையே. நாங்களுந் அவர்களைப்போன்ற இருக்கலாகாதா? எங்களிடம் வீரமில்லையா? விவேகமில்லையா? தீரமில்லையா? தியாகமில்லையா? அன்பு இல்லையா? சகோதரிகளே சற்றே சிந்தியுங்கள். எந்த நாட்டிற பெண்கள் அறிவுள்ளவர்களாக இருக்கின்றார்களோ? எந்த நாட்டிற பெண்கள் நன்கு மதிக்கப்பட்டுப் போற்றப்பட்டு வருகின்றார்களோ? எந்த நாட்டிற் பெண்கள் கடமையை உணர்ந்து அதன்வழிச் செல்கின்றார்களோ? எந்த நாட்டிற் பெண்கள் சம உரிமையுடன் திகழ்கின்றார்களோ? எந்த நாட்டிற் பெண்கள் தம் சேவையைத் திறம்படச் செய்கின்றார்களோ? அந்த நாடே விழிப்புற்ற நாடாகும்.

இடைக்காலத்தில் இன்னலுற்றதாயினும், அந்நியராட்சியிற் கைப்பட்டு அவதியுற்றதாயினும், கைவிலங்கு கால்விலங்கு பூட்டப்பட்டுக் கண்ணுறல்நியதெனினும் இப்பொதுமெம் இலங்கா விழித்து நிற்கின்றது. எனினும் இன்னும் நன்கு தெளிவு பெறவில்லை. இடையிற் றூங்கிவிடுமோ என்ற பயம் இருக்கின்றது. நாட்டின் நலன்கோரும் நங்கையர்களே! எம் தாய் - இலங்காதேவிக்குத் தூக்கமோ சிறு வியாதியோ வரலாமாதாக்க வேண்டுவது நாங்கள்தாம்; முதலாவது தேவையானது எது? மாதர் - அவர்தம் அறிவுதான் வேண்டும். நற்றாயால் வளர்க்கப்பட்ட பாலன்றான் உலகோர் புகழ் உத்தமனாவான். தாய்மை எவ்வளவு உன்னத காரியத்தை உலகிற்குச் செய்கின்றது! ஓர் பாலன் எவ்வாறு தாயால் உன்னதநிலை யடைகின்றானோ அஃது போலவே எமநாடும் பெண்களாற்றான் பெருமையடையும். பெண்கள் முன்னின்றால் எதுதான் முடியாது? உலக யுத்தமே நடவாது நின்று விடுமே! ஆகவே பெண்கள் உண்மையான சமஉரிமை பெற்று வீறுடன் எழுவார்களாயின் நம்நாடும் இனிது முன்னேற்றமடையும் என்பது திண்ணம்.

சிலர், கற்றபெண்கள் கணவரை மதியார்களென்றும் அரசாங்கத்தில் ஈடுபட்ட ஆண்மக்கள் தங்கள் குடும்பங்களைச் சரியாக நடத்தமாட்டார்களென்றும், பிள்ளைகளை நன்கு பேணார்களென்றும் கூறுவர். இஃது சரியல்ல. கற்ற பெண்களே கற்ற தன் பயனாகத் தம் குடும்பங்களைச் செவ்வனே நடாத்துவர். அவர்கள் இல்லறம் நல்லறமாவதுமன்றி நாடும் நலம்பெறும். அன்னை சரோஜினி நாயுடுபோன்ற பெண்கள் மாதரிரம் இல்லறத்தில் ஈடுபடவில்லையா? அவர்கள் வாழ்க்கை வளம்பெறவில்லையா? குடும்பம் நன்கு சிறப்புறவில்லையா? அவர்களும் இல்லறத்திலீடுபட்டு இன்புடன் ஆதனையும் நடாத்தித் தம் நாட்டின் சேவைகளையும் பூர்த்தி செய்தார்களே! அந்த போன்ற எம்மிலங்கைப்பெண்களும் இல்லறத்தையும் நன்கு நடத்துவதோடு நாட்டின் கடமையையும் நன்கு செய்யவேண்டும். அவர்களைப் போன்ற அருந்தொண்டாற்றி விடினும் ஒவ்வொருவரும் தங்களாலியன்றளவு செய்ய வேண்டும். "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்றனர் ஆன்றோரும்.

ஆதலால் அருமைச் சகோதரிகளே! உங்கள் கடமை இன்னதென்பதை உணருங்கள்! கவலையை நீம்பக்கல்லுங்கள்! சம உரிமையை நிலைநாட்டுங்கள்! அடிமைத் தளைகளை அறத்தெறியுங்கள்! ஒற்றுமையை நிலவச் செய்யுங்கள்! சகோதரத்துவத்தை நிலை நிறுத்துங்கள்! எதிர்கலப் பெண்மணிகளனைவரும் ஒவ்வொரு பொன்மணிகளாக விளங்க வேண்டும். கற்புக்கணிகளாக அழகுறவேண்டும். நாட்டிற்கு நல்லொளியாகத் திகழ வேண்டும். ஆகவே இலங்காதேவியின் இன்பக்குழந்தைகளே! உங்கள் மாதாவிற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மனமுவந்து இன்றே ஆற்ற முற்படுங்கள்! உங்கள் அகம் நினைமின்கள்! உங்கள் நாட்டை நினைமின்கள்! நாடு - எம் நாடு - என்ற உணர்ச்சியைப் பெறுங்கள்! அந்த உணர்ச்சி மாதாநிலமகத்தலைக்கொண்ட அந்தநேரத்திலேயே எம்நாடு விழித்தெழும் - முன்னேற்றமடையும். அத்துடன் மாதர் உலகமும் முன்னேறும்!

— சுயரிதரிசி, மகளிர் மன்றம்
இந்துமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்

கந்தபுராண படனம்

தெய்வயானையம்மைதிருமணப்படலம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை பாதாவில் ஷை சபையின் சைவாசிரியர் நாவலர் மண்டபத்தில் தினமும் நடைபெற்றவரும் கந்தபுராண படனத்தின் தெய்வயானையம்மை திருமணப் படலப் படிப்பு இம்மாதம் கூ உ (15 7-51) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் சமுகமளித்துப் படிப்பைச் சிறப்பிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார ஆலைச்சி
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
11—7 -51.
J 193 13—7—51

தேவை

வலிகாமம் வடக்கு ஐக்கிய மீனேபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத்திற்கு வெகுகாலம் கட்டி தனுப்பக்கூடிய 15,000 சாக்குகள் இவ்வருஷம் ஆகஸ்டு மாசத்தில் தேவை. சங்கத்திற்கெண்டு வருது கொடுக்க, தெரியவுள்ளதா 1000 சாக்குக்கு எத்தனை ரூபா வேண்டும் என்று, சங்கக் காரியதரிசிக்கு பூலை மாசம் 22-க் திகதிக்கு முன் எழுதிப் போடவும். மற்றும் விபரங்களுக்கு தபால் மூலமாகமோ, அல்லது நேரிலோ அறிவலாம்.

சாரியதரிசி
வ. வ. ஐ. வி. உ. வி.
சங்கம், கன்னாகம்

10.7.51
M 51 13-7-51

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எசசந்த சாராசி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விதத வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட சேமிப்பணம்

சேமிப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வகையறுத்து ஏற்பதும் வட்டியும் முறையே 1 விதம், 2 விதம் 4 விதம் 6 விதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "ரங்கூன்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் அடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விதம் - அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
கிருப்பர்.

Std 14 20-11-46—20-11-49

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

திறமான தேக்கமரங்கள்

பல தினுசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
யாழ்ப்பாணம்

Std 2

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Friday July 13, 1951